# 104. பயமுள்ள ஆவியை கொடாமல்

**பல்லவி**

பயமுள்ள ஆவியை கொடாமல்
பெலனும் அன்பும் தெளிந்தபுத்தியின் ஆவியை
எங்களுக்கு கொடுத்த தேவனே ஸ்தோத்திரம்

**சரணங்கள்**

1. பயமானது வேதனை உள்ளதே
பயபடுகிறவன் அன்பிலே இல்லையே (2)
நமக்குள் பூரண அன்பு உள்ளதே
பயத்தை புறம்பே அது தள்ளுமே
- பயமுள்ள ஆவியை

2. சவுலும் இஸ்ரவேலரும் பயந்தார்கள்
எதிரி கோலியாத்திற்கு நடுங்கினார்கள்
சேனைகளின் தேவனை மறந்தார்கள்
எதிரி முன் நிற்காமல் ஓடினார்கள்
- பயமுள்ள ஆவியை

3. தாவீது தேவனில் பெலன்கொண்டான்
எதிரி கோலியாத்திற்கு எதிர்த்துநின்றான்
சேனைகளின் தேவனை சார்ந்துகொண்டான்
எதிரியை மிதித்து ஜெயம் பெற்றான்
- பயமுள்ள ஆவியை